
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1041**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

**139**

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **மிசா பி.மதிவாணன்** அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# ‘கால்களிலும் விலங்கிடப்பட்ட’ மிசா பி.மதிவாணன்

1975-ஆம் ஆண்டு, நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டு, கழக முன்னோடிகள் கொத்துக் கொத்தாகக் கைது செய்யப்பட்டு, சிறைகளில் அடைக்கப்பட்டுக் கொண்டிருந்த நேரம். ‘பேரறிஞர் அண்ணா துயிலிடத்துக்கு மாலை இட வராதவர்கள்’ என முரசொலியில் கைது செய்யப்பட்டவர்களைப் பட்டிய லிட்டிருந்தார், முத்தமிழறிஞர் கலைஞர். தேடித்தேடி கைதுசெய்யப்பட்டு, கைவிலங் கிடப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டவர்களில், காலிலும் சங்கிலி பிணைக்கப்பட்டு கடைவீதிகள் வழியே இழுத்துச் செல்லப்பட்டார் ஓர் உடன்பிறப்பு. அவர்தான், செம்பனார் கோவில் ஒன்றியச் செயலாளராகப் புகழ்பெற்ற மதிவாணன். மிசா பி.மதிவாணன் என்றால் கீழத்தஞ்சைக் கழகத்தினருக்கு, அவர் நினைவுகள் நெகிழ்வைத் தரும்.

“கழகமும் நானும் சந்தித்த சோதனைக் காலங்களில் மதிவாணன் போன்ற மாணிக்கங்களால்தான் இந்த இயக்கத்தை என்னால் கொண்டுசெல்ல முடிந்தது. இல்லையெனில், இந்த இயக்கம் தளிர் வற்றிய மரம் போல் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கும்’’ என்று முத்தமிழறிஞர் போற்றிய உடன்பிறப்பு. தஞ்சைத் தரணியில் கழக தளகர்த்தர்களாகத் திகழ்ந்த மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி, விளநகர் கணேசன், மாயவரம் கிட்டப்பா ஆகியோர் களால் வளர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர் மதிவாணன்.

அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத் திலும், பின்னர் நாகை மாவட்டத்திலும் இருந்த, இன்றைய மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஒன்றியம், திருச்சம்பள்ளியில் 22.04.1939 அன்று பிறந்தவர் மதிவாணன். பெற்றோர் பேச்சிமுத்து-மாரியம்மாள். இளவயது முதல் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு, தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கினார்.


## கிளைக் கழகச் செயலாளர்

செம்பனார்கோவில் ஒன்றியம், பரசலூர் கிளைக் கழகச் செயலாளராகத் தனது கழகப் பணியைத் தொடங்கி, மயிலாடுதுறை வட்டக் கழகப் பிரதிநிதி, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டக் கழகப் பிரச்சாரக் குழு உறுப்பினர், செம்பனார்கோவில் ஒன்றிய கழகப் பொறுப்பாளர் எனப் படிப்படியாகப் பொறுப்புகளில் தன்னைக் கரைத்துக்கொண்டவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தின்போது, மன்னையார், கோ.சி.மணி ஆகியோருடன் இணைந்து, துடிப்பு மிக்க காளையாகக் களப்பணியாற்றியவர் மதிவாணன்.

1965-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றவர். இலங்கைத் தமிழர் பிரச்சினை களுக்கான போராட்டம் ஆகியவற்றில் கலந்துகொண்டு கைதானார்.

இவரது சிறைச்சாலைக் கொட்டடி அனுபவத்தில், நெருக்கடி நிலை கால கைது, குறிப்பிட்டு எழுதப்பட வேண்டியது.




கைகளிலும் கால்களிலும் காலில் விலங்கிடப்பட்டு, கடைத் தெருவில் இழுத்து வரப்பட்டு, திருச்சி மத்திய சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டவர். ஓராண்டு கடுங்காவல் தண்டனை பெற்ற பெருமைக்குரிய கழகப் போராளி ஆவார்.

சிறையில் இருந்து வெளிவந்த அவருக்கு கழகம் அளித்த சிறப்புப் பொறுப்பாக, 1978-ஆம் ஆண்டில் செம்பனார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். தொடர்ந்து ஆறு முறை ஒன்றியச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 2003-ஆம் ஆண்டு வரை அந்தப் பொறுப்பில் செயல்பட்டு வந்தார். தொடர்ந்து, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், மாநில விவ சாயத் தொழிலாளர் அணிச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வந்தார். 2006-2011-ஆம் ஆண்டுக் காலத்தில் செம்பனார்கோவில் ஒன்றியக் குழு உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றினார். காவிரி நதிநீர் குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தவர்.

## பெரியார் விருது

1993-ஆம் ஆண்டு நடைபெற்ற கழகப் பொதுக் குழுவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, கழகத் தலைவராக முன் மொழிந்தவர்களில் மிசா. பி.மதிவாணன் அவர்களும் ஒருவர். தலைமைக் கழகத்தின் சார்பில், செப்டம்பர் மாதத்தில் ஏற்பாடு செய்யப்படும் முப்பெரும் விழா போல, செம்பனார்கோவில் ஒன்றியத்தில் தொடர்ச்சியாக 23 ஆண்டுகள் கழகத்தின் முப்பெரும் விழாவை, மூன்று நாள்கள் விழாவாக நடத்திப் பெருமை சேர்த்தவர்.

மாவட்ட எல்லைகளால் இன்று, திருவாரூர் - நாகப்பட்டினம் - மயிலாடு துறை எனப் பிரிக்கப் பட்டிருந்தாலும் கழக உணர்வால் பிரிக்க முடியாத ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம் என்பதற்கு மதிவாணன் போன்ற முன்னோடிகள் சான்றாக உள்ளனர். ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில், போக்குவரத்து வசதிகளற்ற கிராமப்புறங்களுக்குக் கழகத்தையும் கலைஞரையும் நெஞ்சில் ஏந்தி, மிதி வண்டியிலேயே பயணப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

“பொதுவாழ்வில் எத்தகைய துன்பங்கள், துயரங்கள் வந்தாலும், மதிவாணன் போன்றவர்கள் என்னோடு இருக்கின்ற காரணத்தால், அவற்றையெல்லாம் தாங்கிக்கொள்கிற திடமும், தெம்பும், வலிவும் எனக்கு இருக்கின்றன என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், மதிவாணன் இல்லத் திருமண விழாவில் குறிப்பிட்டுள்ளார்.

> 1968-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் திருமணம் செய்துகொண்டவர் மதிவாணன். அவர் திருமணத்தை தலைவர் கலைஞர் அவர்கள் நடத்தி வைத்ததுபோல, அவரின் மகள் திருமணத்தை இன்றைய கழகத் தலைவர் நடத்திவைத்து வாழ்த்தினார்.

1968-ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் திருமணம் செய்துகொண்டவர் மதிவாணன். அவர் திருமணத்தை தலைவர் கலைஞர் அவர்கள் நடத்திவைத்ததுபோல, அவரின் மகள் திருமணத்தை இன்றைய கழகத் தலைவர் நடத்தி வைத்து வாழ்த்தினார். அந்த அளவுக்கு கழகமே குடும்பமாக நினைத்து பணியாற்றியவர், மதிவாணன். வயது மூப்பு காரணமாகத் தீவிர அரசியல் பணிகளை அவர் குறைத்துக் கொண்டபோது, கழக உணர்வு குறையாமல் அவரின் குடும்பத்தினரும் களப்பணிகளைக் கையில் எடுத்துக்கொண்டனர்.

மதிவாணன் அவர்களின் கழகப் பணிகளுக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில், 2021-ஆம் ஆண்டில், தலைமைக் கழகத்தின் சார்பில் முப்பெரும் விழா விருதுகளில் பெரியார் விருது வழங்கி சிறப்பித்தார் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இந்த நிலையில், வயது மூப்பு காரணமாக 2023-ஆம் ஆண்டு மே மாதம் 4-ஆம் தேதி தன் இயக்கத்தை நிறுத்திக்கொண்டார். அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மயிலாடுதுறை, நாகை, திருவாரூர் மாவட்டக் கழகத்தினர் திரண்டு வந்து இறுதி மரியாதை செய்தனர். கழகத் தலைவர் இரங்கல் எழுதினார். கழக இளைஞர் அணிச் செயலாளர், மதிவாணன் இல்லம் சென்று புகழ் மாலை சூட்டி வந்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக, அவரது நினைவு நாளின்போது, இளைஞர்கள் திரளாகக் கலந்துகொண்டு, மிசா. மதிவாணன் வரலாற்றை அறிகின்றனர். தி.மு.கழகத்தின் முன்னோடிகள் எந்தக் காலத்திலும் மறக்கப்படுவதில்லை, நூறு ஆண்டுகளுக்குப் பின்னும், அவர்களின் வரலாற்றை நினைக்கும் தலைமுறை உருவாகிக்கொண்டே இருக்கும் என்பதற்கு அவர்களது நினைவு நாள் நிகழ்வுகளே சான்று!

...துடிக்கும்

## தமிழ்நாடு அனுமதிக்காது!

சபரிமலை கோயிலில் அனைத்து வயது பெண்களையும் தரிசனத்திற்கு அனுமதிக்கும் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியது. அதை நிறைவேற்றக் கூடாது என்று பெரும் போராட்டங்களை நடத்தியது பா.ஜ.க. தற்போது திருப்பரங்குன்றத்தில் நீதிமன்றத் தீர்ப்பை நிறைவேற்ற வேண்டும் என இரட்டை வேடம் போடுகிறது.

இதுதொடர்பாகத் தனது சமூக வலைதளப் பக்கத்தில் எழுதியுள்ள கழக செய்தித்தொடர்பு இணைச்செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஆர்.எஸ்.எஸ். சொன்ன ‘FAITH’ நினைவிருக்கிறதா?

சபரிமலை விவகாரத்தில், ‘நிறைவேற்ற முடியாத தீர்ப்புகளை வழங்குவதை நீதிமன்றங்கள் தவிர்க்க வேண்டும்’ என்றார், இன்றைய உள்துறை அமைச்சர் அமித் ஷா. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மத நம்பிக்கைகளுக்கு எதிரானது என்று கூறி, தீர்ப்பை நடைமுறைப் படுத்தக் கூடாது என்று கலவரம் செய்தன சங்கி கும்பல்கள்.

அப்படியே மதுரைக்கு வந்தால், காலம்காலமாக திருப்பரங்குன்றம் மலையில் குறிப்பிட்ட இடத்தில் தீபம் ஏற்றப்படுகிறது. முருக பக்தர்கள், இறை நம்பிக்கை உடையோர் என அனைத்து தரப்பும் அதை வழிபடுகிறார்கள். திடீரென ஒரு சங்கி, அந்த நம்பிக்கைக்கு எதிராக, தன் விருப்பப்படி மற்றொரு இடத்தில் தீபம் ஏற்ற வேண்டும் என்று வழக்குப் போடுகிறார். நீதிபதியும் அதை ஏற்று உத்தரவு போடுகிறார்.

பெரும்பான்மை முருக பக்தர்களின் நம்பிக்கை அடிப்படையில், வழக்கமான இடத்தில் தீபம் ஏற்றி, பக்தர்களின் நம்பிக்கையை காப்பாற்றுகிறது, ஆலய நிர்வாகம். அரோகரா முழக்கம் எழ வேண்டிய இடத்தில், பாரத் மாதாக்கீ ஜே என்று முழக்கம் எழுப்புகிறது காவிக் கும்பல். காவல் துறையைத் தாக்கி வன்முறையில் இறங்குகிறது சங்கிக் கூட்டம். கலவர சங்கிகளைக் காவல்துறை வாகனத்தில் ஏற்றும்போது, திருப்பரங்குன்ற முருக பக்தர்கள் கைதட்டி குதூகலிக்கிறார்கள்.

மரபான வழிபாட்டு முறைக்கு எதிராக, பக்தர்களின் நம்பிக்கைக்கு (அமித் ஷா சொன்ன அதே ‘FAITH’) எதிரான சங்கிகளின் முயற்சி முதற்கட்டமாக முறியடிக்கப்பட்டது. சமூக அமைதியை நிலைநாட்டிய அரசு, காவல் துறை, ஆலய நிர்வாகம், மதுரை மக்கள், முருக பக்தர்களுக்கு நன்றி.

“We are not allowing.. we’ll face the consequences” என்பது காவலர் ஒருவரின் தனிப்பட்ட குரல் அல்ல. குஜராத்தில், உத்தரப் பிரதேசத்தில் நிகழ்த்தியதை தமிழ்நாட்டில் நடத்தப்பார்க்கும் ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.க. – காவி கும்பலுக்கும், அவர்களது அடிமைகளுக்கும் எதிரான ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் குரல்.

“Yes, Tamil Nadu will not allow it. Tamil Nadu will face the consequences.” எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



எம்.சி.பி.இளையராஜா



### வாழ்நாளில் மிகச் சிறந்த வாய்ப்பு!

2011-ஆம் ஆண்டுவாக்கில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு அமைந்தது. அன்று, சேப்பாக்கம் பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளராக இருந்த எனக்கு, தலைவருடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள கிடைத்த வாய்ப்பு, வாழ்நாளில் மறக்க முடியாது.

– எம்.சி.பி.இளையராஜா,
துணைச் செயலாளர், சேப்பாக்கம் பகுதி,
சென்னை மேற்கு மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### 40 ஆண்டுகளானாலும் சிறைக்குத் தயார்!

1963-ஆம் ஆண்டு ஏப்ரல் 3-ஆம் தேதி, அன்றைய உள்துறை அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி, நாடாளு மன்றத்தில், ‘இந்தி ஆட்சிமொழி மசோதா’வைத் தாக்கல் செய்தார். மசோதா குறித்து, மாநிலங்களவையில் பேரறிஞர் அண்ணாவின் பேச்சு, வழக்கத்துக்கு மாறாகக் கோபத்தை வெளிப்படுத்தியது. ‘‘அமைதியான சூழ்நிலையையும், ஒற்றுமை மனப்பான்மையையும் குலைத்து, குரோதத்தை இந்த மசோதா ஏற்படுத்துகிறது. ஆகவே, இந்தியை எதிர்க்கும் போராட்டத்தில், 4 ஆண்டுகள் அல்ல, 40 ஆண்டுகளானாலும் சிறைக்குச் செல்ல தயாராக இருக்கிறேன்’’ என்றார் அண்ணா.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131